# தமிழ் மக்களை ஒடுக்குவதையும் அடக்குவதையுமே இலங்கையின் சட்டங்கள் நோக்காகக் கொண்டுள்ளன!

## இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

தமிழ் மக்களை ஒடுக்குவதையும் அடக்குவதையுமே இலங்கையில் கொண்டு வரப்பட்ட, கொண்டுவரப்படுகின்றசட்டங்கள்செயற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற நிகழ்நிலைக் காப்பு வரைவுச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்நிலைக் காப்பு வரைவுச் சட்டம் மூலம் பாதிக்கப்படப்போவது தமிழ் மக்கள்தான்.

Online Safety Bill - எனும் பெயரில் கொண்டு வரப்பட்ட நிகழ்நிலைக் காப்பு வரைவுச்சட்டமூலம், தமிழ் மக்களுக்கு மிகவும் ஆபத்தானது.

இலங்கையில் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் 30, 40 ஆண்டுகளாக தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும் அடக்குவதற்குமே பயன்படுத்தப்பட்டன.

வடக்கு,கிழக்கில்தமிழ்மக்கள்முகம்கொடுக்கும் ஒருபிரச்சனைக்குஎதிராகஒருபாரியகடையடைப்பு போராட்டம் அல்லது ஹர்த்தால் அறிவித்தால் அந்த அறிவித்தலை வழங்குபவர்களை இந்தச் சட்டத்தின் ஊடாகக் கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அதே போல 15 வருடங்களாக காணாமல் போன எமது உறவுகளுக்காக தாய்மார்களும், உறவினர்களும் வீதி வீதியாக போராடி 2000க்கும் மேற்பட்ட நாட்கள் கடந்தும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களையும் இந்தச் சட்ட மூலத்தினூடாக கைது செய்யக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

வடக்கு, கிழக்கில் காணப்படும் மக்களின் விகிதாசாரத்தை மாற்றுவதற்காகவும் பெரும்பான்மைசமூகத்தினரை மேலும் அதிகரிக்கவும் அரசாங்கத்தால் சட்ட விரோத குடியேற்ற



வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறானவிடயங்களைச்சுட்டிக்காட்டினால் கூட அவை சட்டவிரோதமான செயற்பாடுகள் - என குறித்த சட்டமூலம் மேற்கோள் காட்டும், எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளார். (04)


# மாலைக்கதிர்

Maalaikkathir








சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 11 வியாழக்கிழமை 25.01.2024 கதிர் 165


# வடக்கு மாகாணத்தில் மீன்பிடித்துறை சார் முதலீட்டு வலயம் சீன நிறுவனத்துடன் விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது!

## கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் அமைச்சர் பியல் நிஷாந்த

வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு மீன்பிடித்துறைசார் முதலீட்டுவலயத்தை ஆரம்பிப்பதற்கு சீன நிறுவனமொன்றுடன் விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிாந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உள்நாட்டு ரின்மீன் உற்பத்தியாளர்களின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு ரின்மீன் இறக்குமதிக்கு தடை விதிப்பதற்கு அண்மையில் தீர்மானித்திருந்தோம்.

வடக்கை அடிப்படையாகக் கொண்டு மீன்பிடித்துறை சார் முதலீட்டு வலயத்தை ஆரம்பிப்பதற்காக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



சீனா உட்பட பல்வேறு நாடுகளிடமிருந்து புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின்

2▶





# திருமண நிகழ்வில் சனத் இறுதியாக எடுத்த 'செல்பி'

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உயிரிழப்பதற்கு முன்னர் திருமண நிகழ்வொன்றுக்குச் சென்றுள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்ற அவர், இரவு சமூக ஊடகச் செயற்பட்டாளர் ஒருவரின் திருமண நிகழ்வுக்குச் சென்றுவிட்டு மீண்டும் கொழும்பு திரும்பும்போதே விபத்தில் சிக்கியுள்ளார்.

திருமணமான மணமகன் இது தொடர்பில் பேஸ்புக்கில் 'செல்பி' படத்தைப் பதிவிட்டு தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளார். மாமா சனத் நிஷாந்தவுக்கு என்ன நடந்தது

2▶

# கோர விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உட்பட இருவர் மரணம்!

## மேலும் ஒருவர் படுகாயம்



கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உட்பட இருவர் பலியாகியுள்ளனர்.

கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஜீப் ரக வாகனம், முன்னால் பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் வாகனத்துடன் மோதி, வீதி பாதுகாப்பு வேலியிலும் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜீப்பில் பயணித்த இராஜங்க அமைச்சர் சனத் நிஷாந்த, அவரின் பாதுகாப்பு

2▶

# கொள்கலன் சாரதி கைது

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் கொள்கலன் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்தவின் ஜீப் ரக வாகனம், முன்னால் சென்ற கொள்கலன் வாகனத்துடன் மோதி பின்னர் வீதியின் அருகில் இருந்த பாதுகாப்பு வேலியில் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

2▶

# மேலுமொரு பௌத்த தேரரை குறிவைத்து துப்பாக்கிச்சூடு

குருநாகல், தொடங்கஸ்லந்த - உடத்தபொலவில் அமைந்துள்ள விகாரையை இலக்கு வைத்து நேற்று இரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விகாராதிபதி கல்னேவ பன்னகித்தி தேரரின் வரவேற்பறையில் உள்ள ஜன்னல் ஒன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட போதிலும், பன்னகித்தி தேரர் அப்போது விடுதியின் வேறொரு இடத்தில் உறங்கிக் கொண்டிருந்ததால் அவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

2▶


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## கோர விபத்தில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரி மற்றும் சாரதி ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர். இதனையடுத்து அவர்கள் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இராஜாங்கஅமைச்சரும்,பொலிஸ்கான்ஸ்டபிலும்உயிரிழுந்துள்ளனர். சாரதி சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கொள்கலன்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனையடுத்துக் கைது செய்யப்பட்டுள்ள கொள்கலன் வாகனத்தின்சாரதிவிசாரணைக்காகப்பொலிஸ்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்படுவார்என்றுபொலிஸார்குறிப்பிட்டுள்ளனர். (அ)

## திருமண நிகழ்வில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. எனக்காக – என்னைப் பார்க்க வந்த பயணத்தில் இந்தத் துயரச் சம்பவம் நடந்தது என்பதனை நான் எப்படித் தாங்கிக்கொள்வேன். ஆத்மா சாந்தி அடையட்டும் மாமா – என்று அவர் பதிவிட்டுள்ளார். (அ)

## வடக்கு மாகாணத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில்சீனநிறுவனமொன்றுடன்இதுதொடர்பில் விசேட பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் வடக்கில் மாத்திரமின்றி மீனவர்கள் வாழும் சகல மாகாணங்களையும் உள்ளடக்கி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதே எமது நோக்கமாகும்.

நாடுகளுக்கிடையிலான உறவுகளில் எவ்வித விரிசலும் ஏற்படாத வகையிலேயே இலங்கை – இந்திய மீனவர் பிரச்சனையை அணுகுகின்றோம்.

வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்த பிரதான பிரச்சினை தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம்.

இவ்விடயத்தில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு கடற்படைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது, எனவும் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்துள்ளார். (04)

## சனத் நிஷாந்தவின் வெற்றிடத்துக்கு விமலின் ஜகத் பிரியங்கர தெரிவு!

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் திடீர் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஜாதிக நிதஹஸ் பெரமுனவை சேர்ந்த ஜகத் பிரியங்கர நியமிக்கப்படவுள்ளார், என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜகத் பிரியங்கர, விமல் வீரவங்ச தலைமையிலான ஜாதிக நிதஹஸ் பெரமுனவின் மாவட்டத் தலைவராக செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழப்பு

வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். கதிர்காமம் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் வெலிமடை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையபொலிஸ்கான்ஸ்டபிளேசாவடைந்துள்ளார்.

நேற்று மாலை திஸ்ஸமஹாராம – கதிர்காமம் வீதியில் புஞ்சி அகுருகொட பிரதேசத்தில் தனியார் பஸ் ஒன்று திஸ்ஸமஹாராமவில் இருந்து கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

பஸ், இரட்டைக் கோடு விதிகளை மீறி, அதே திசையில் சென்ற டிரக்டரை முந்திச் செல்லும்போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இந்தவிபத்தில்மோட்டார்சைக்கிளின்பின்னால்சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பலத்த காயங்களுக்குள்ளாகி தெபரவெவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## மேலுமொரு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கம்பஹாவில் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளைப் போல் பாவனை செய்து இனந்தெரியாத நான்கு நபர்களால் பௌத்த பிக்கு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு நாளின் பின்னர் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ)

## ஜிந்துப்பிட்டியில் துப்பாக்கிச் சூடு!

### இளைஞர் படுகாயம்

கொழும்பில் நேற்று இரவு 9.30 மணியளவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜிந்துப்பிட்டி குதியில் இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார்சைக்கிளில்வந்தஇனந்தெரியாதஇருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தப்பிச் சென்றவர்களில் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன்கொழும்புகரையோரபொலிஸ்நிலைய அதிகாரிகளால்கைதுசெய்யப்பட்டுஆட்டுப்பட்டித்தெரு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.


ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜோஜ்ராஜ் தனுஷ்ராஜ் என்ற 26 வயதுடைய இளைஞரே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி யுள்ளார். (அ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்





வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் - நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய புனருத்தாரன மஹா கும்பாபிஷேகம் நேற்று புதன்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. அதிகாலை 5 மணி முதல் ஓமகுண்ட கிரியைகள் நடைபெற்று கும்பாபிஷேகம் நடந்தேறியது.

பிரதான கும்பம் மற்றும் ஏனைய கும்பங்கள் குருமார்களால் உள் வீதி வெளி வீதியில் எடுத்துச் செல்லப்பட்டு யானை குதிரை என்பன வலம் வந்தன.

கும்பாபிசேகம் நடைபெற்றபோது பெரியளவிலான ட்ரோன்கள் மூலம் ஆலயத்துக்கு பூக்கள் சொரியப்பட்டன.

கும்பாபிசேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.

விசேடமாக யானை, குதிரை என்பன வரவழைக்கப்பட்டு கும்பாபிகேம் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிசேகத்தை தொடர்ந்து 45 நாட்களுக்கு மண் டலாபிஷேகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (01)

# பாலையடி வால விக்னேஸ்வர ஆலய மகா சங்காபிஷேகம்





காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வர ஆலய மகா சங்காபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது.
படங்கள்- வி.ரி. சகாதேவராஜா




## ஜமாலியா வித்தியாலயத்துக்கு பேச்சு மேடை வழங்கிவைப்பு



(எம்.எம்.ஜெஸ்மின்)

சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயத்தின் மிக நீண்டகால தேவையாக இருந்த பேச்சு மேடை (podium) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத் தேவையினை நிவர்த்தி செய்யும் முகமாக பாடசாலையின் நன்மை கருதி இவ்வுபகரணத்தினை, ஜமாலியா பாடசாலையின் முன்னாள் அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எம்.ஐ.எம்.றிஸ்விகான் மற்றும் உறுப்பினர் எம்.எஸ்.முனாஸ் ஆகியோரினது சொந்த நிதியினூடாகத் தயார் செய்து வழங்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை (22) பாடசாலைக்கு புதிதாக கடைமையேற்ற அதிபர் ஏ.எம்.றிஸ்வானிடம் அது வழங்கி வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் மஜ்லிஸ் அஷ்ஷூறா மற்றும் நம்பிக்கையாளர் சபையினுடைய கௌரவ உறுப்பினர்களும் வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலையினுடைய ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் பங்கெடுத்திருந்தனர்.

# செங்கடலில் நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்ந்தால் மூன்றாம் உலகப் போருக்கு அவை வழிவகுக்கக் கூடும்!

## ஐ.நா. பொதுச் சபை தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ்



செங்கடலில் நடத்தப்படும் தாக்குதல்கள் கவலையளிக்கின்றன. இத்தாக்குதல்கள் தொடாவது, மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கக் கூடும் என ஐ.நா. பொதுச் சபை தலைவா டென்னிஸ் பிரான்சிஸ் நேற்று எச்சரித்துள்ளார். ஐ.நா. பொதுச் சபையின் 78 ஆவது அமா வின் தலைவா டென்னிஸ் பிரான்சிஸ், இந்தியாவுக்கு 5 நாள் அரசு முறைப் பயணமாக கடந்த திங்களன்று சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தில், பல்வேறு மத்திய, மாநில அரசு பிரதிநிதிகளுடன் அவா இருதரப்பு பேச்சுவார்தையில் ஈடுபடுகிறார். பொதுமக்களுடனான சந்திப்பிலும், சிந்தனைக் குழுக் கூட்டங்களிலும் அவா பங்கேற்க உள்ளார்.

இதற்கிடையே -பிடிஐ-செய்தி நிறுவனத்துக்கு அவா நேற்று அளித்த சிறப்பு பேட்டியில், செங்கடலில் தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்கள் கவலையளிக்கின்றன. இத்தாக்குதல் தொடாந்தால் மூன்றாம் உலகப்போருக்கு வழிவகுக்கக் கூடும். செங்கடலில் ஹூதி கிளாச்சியாளாகள் தொடங்கிய தாக்குதலுக்கு மூன்றாம் தரப்பினா உதவுவதுபோல் உள்ளது. எனவே சூழல் மிகவும் மோசமாக மாறி வருகிறது. அதேபோல், காஸா பிரச்னைக்கு அமைதி வழியே தீர்வு. இஸ்ரேல் - பாலஸ்தீனம் என இரண்டும் தனிநாடுகளாக செயல்பட வேண்டும் என்ற இந்தியாவின் கருத்தை நான் வரவேற்கிறேன். ஐ.நா. பாதுகாப்புச் சபைச் சீர்திருத்தம் தொடாபான ஜி4 பேச்சுவார்த்தைக் குழுவுடன் இணைந்து, 2 ஆண்டுகளுக்குள் இந்தச் செயல்முறையை முடிக்க இந்தியா லட்சியம் கொண்டுள்ளதை நான் நன்கு அறிவேன். எனினும், இவ்விவகாரத்தில் முன்னேற்றம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

அரசுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தைகள் உறுப்பு நாடுகளால் நடத்தப்படுகின்றன. சீர்திருத்த செயல்முறையை முன்னெடுத்துச் செல்வதற்காக அரசியல் விருப்பத்தையும் அவாகள் காண விரும்பும் மாற்றத்தையும் வெளிப்படுத்தும் பொறுப்பு அவர்களிடமே உள்ளது.

நமது பலதரப்பு அமைப்பை வளாப்பதற்கும் நம்பிக்கையை எழுப்புவதற்கும் சர்வதேச ஒத்துழைப்பின் உணாவைப் புதுப்பிப்பதற்கும் உண்மையான அரசியல் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமாகும். இவ்விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பை நான் பாராட்டுகிறேன்.

ஐ.நா. பொதுச் சபை தலைவராக ஐ.நா. சபையின் பரந்த சீர்திருத்தத்தின் பின்னணியில்தான் பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் குறித்த அவசியத்தை நான் அணுகுகிறேன். மேலும், மோதல்களுக்கு தீர்வு காணும் ஐ.நா. சபையின் உறுதிப்பாட்டில் நான் உறுதியாக இருக்கிறேன்.

இந்தியாவின் சமீபத்திய ஜி20 தலைமை ஒரு வரலாற்று மைல்கல் ஆக திகழ்கிறது. ஜி20 தலைமை போன்ற தனித்துவமான வாய்ப்பின் பலன்கள் இந்தியாவுக்கு மட்டுமின்றி சக வளரும் நாடுகளுடன் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டது. ஜி20 கூட்டமைப்பில் நிரந்தர உறுப்பினராக ஆபிரிக்க ஒன்றியம் இணைக்கப்பட்டது தெற்குலக ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பின் வலுவான அடையாளமாக உள்ளது. எண்ம பொது உள்கட்டமைப்பு, புத்தாக்க திறன் வளாச்சி, விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துதல் மற்றும் கடன் நெருக்கடியைச் சமாளித்தல் எனப் பல்வேறு உதவிகளை கொரோனா பெருந்தொற்றின்போது பல வளரும் நாடுகளுக்கு வழங்கி, மற்ற நாடுகளுக்கு இந்தியா உதாரணமாக உள்ளது. அதேபோல், ஐ.நா. அமைதிப் படைகளுக்கு அதிகபட்சமாக இந்தியா 2.5 லட்சம் வீராகளை அனுப்பியுள்ளது, என்றும் அவர் குறிப்பிட்டார். (04)

## பிக்பாஷ் லீக் தொடரின் 13 ஆவது சீசன் பிரிஸ்பேன் ஹீட் அணி சம்பியனானது



பிக்பாஷ் லீக் தொடரின் 13 ஆவது சீசன் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இந்த தொடர் கடந்த டிசம்பர் 7 ஆம் திகதி ஆரம்பமாயிருந்தது.

இந்தத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று (24) சிட்னியில் நடைபெற்றது. இதில் சிட்னி சிக்சர்ஸ் அணியும், பிரிஸ்பேன் ஹீட் அணியும் மோதின.


போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிரிஸ்பேன் ஹீட் அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுக்கு 166 ஓட்டங்களை எடுத்தது. ஜோஷ் பிரவுன் 53 ஓட்டங்களையும், ரென்சா 40 ஓட்டங்களையும் பெற்றனர். சிட்னி அணியின் சீன் அபாட் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதையடுத்து, 167 ஓட்டங்கள் என்ற இலக்குடன் சிட்னி அணி களமிறங்கியது.

ஆயினும் பிரிஸ்பேன் ஹீட் அணியின் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாத சிட்னி அணி 17.3 ஓவரில் 112 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க, பிரிஸ்பேன் ஹீட் அணி 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று சம்பியன் பட்டத்தைப் பெற்றது.

பிரிஸ்பேன் அணியின் ஸ்பென்சர் ஜான்சன் 4 விக்கெட்களையும் பார்ட்லெட், ஸ்வெப்சன் இருவரும் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது ஸ்பென்சர் ஜான்சனுக்கு அளிக்கப்பட்டது.

## டொனால்ட் ட்ரம்ப்புக்கு மேலுமொரு வெற்றி!



அமெரிக்காவில் வரும் நவம்பா 5 ஆம் திகதி நடைபெறவிருக்கும் அதிபா தோதலில் குடியரசுக் கட்சி வேட்பாளரைத் தோந் தெடுப்பதற்காக அந்த நாட்டின் நியூ ஹம்ப்ஷா மாகாணத்தில் நடைபெற்ற போட்டியில் முன்னாள் அதிபா டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். ஏற்கெனவே, அயவா மாகாணத்தில் நடைபெற்ற உள்கட்சித் தோதலிலும் அவா வெற்றி பெற்றுள்ளார்.

தற்போதைய நிலையில், இந்த 2 மாகாண குடியரசுக் கட்சி அதிபா வேட்பாளா போட்டியில் மட் டுமே ட்ரம்ப் வெற்றி பெற்றிருந்தாலும், இந்தப் போட்டியில் அவரது வலுவான முன்னிலையை தற்போதைய வெற்றி உணாத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தப் போட்டியில் இந்திய வம்சாவளியைச் சோந்த நிக்கி ஹாலே தோல்வியடைந்தாலும், குடியரசுக் கட்சி அதிபா வேட்பாளா தோவில் ட்ரம்ப்புக்கு எதிராக இறுதிவரைப் போராடப் போவதாக அவா அறிவித்துள்ளார்.

ஏற்கெனவே, அயவா மாகாண உள்கட்சி வாக்கெடுப்பில் ட்ரம்ப் வெற்றி பெற்றதைத் தொடாந்து, குடியரசுக் கட்சி அதிபா வேட்பாளா போட்டியிலிருந்து இந்திய வம்சாவளியைச் சோந்த விவேக் ராமசாமி விலகியது நினைவுகூரத்தக்கது. (04)

## அமெரிக்க வான்வழித் தாக்குதலுக்கு இராக் கண்டனத்தைத் தெரிவித்தது

தங்கள் நாட்டில் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவினா மீது அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலுக்கு இராக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டுப் பிரதமா முகமது ஷியா அல்-சூடானியின் செய்தித் தொடாபாளா யேஹியா ரசூல் நேற்று தகவல் வழங்கியுள்ளார்.

இராக்கில் அமெரிக்கா நடத்தியுள்ள பொறுப்பற்ற வான்வழித் தக்குதல், நாட்டின் இறையாண்மையைக் குலைப்பதாக அமைந்துள்ளது.

இராக்குக்கும் அமெரிக்காவுக்கும் நீண்ட காலமாக இருந்துவரும் ஒத்துழைப்பை இது பலவீனப்படுத்துகிறது. காஸா போரால் பிராந்தியப் போா பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், இதுபோன்ற தாக்குதல்கள் அந்தப் பதற்றத்தை மேலும் அதிகரிக்கும், என்று அவா எச்சரித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்க ராணுவ மத்தியக் கட்டளையகம் வெளியிட்ட அறிக்கையில், இராக்கிலுள்ள 3 ஈரான் ஆதரவுப் படையினரின் நிலைகள் மீது வான்வழித் தாக்குல் நடத்தியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக அமெரிக்கப் படையினா மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்குப் பதிலடியாக இந்த வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சா லொயிட் அஸ்டின் கூறினார்.

(04)



# மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசலின் 100 ஆவது வருடாந்த புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ் ஆரம்பம்

(மருதமுனை- ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் 100 ஆது வருடாந்த புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ் (24) புதன்கிழமை மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது.

மருதமுனை மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ.எம். முகர்ரப் அவர்களின் தலைமையில்

ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், 100வது வருடாந்த புஹாரி மஜ்லிஸ் உத்தியோகபூர்வ பிரகடனத்தினை கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத்அலி நிகழ்த்தினார்.

மஜ்லிஸிற்கான மஜ்மா தலைமை உரையினை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் பிரதம பேஷ்இமாம் அல்ஹாபிழ் ஏ.ஆர்.ஜெரீர் (பஹ்மி) நிகழ்தினார். பல முக்கியமான உலமாக்கள் கலந்து கொண்டு விசேட மார்க்க சொற்பொழிவுகளை நிகழ்தியதுடன். 100வது புஹாரி மஜ்லிஸ் பற்றிய வரலாற்று நிகழ்வுகளையும் இங்கு பதிவு செய்தனர். தொடர்ந்து 14 நாட்களுக்கு நடைபெறும் இந்த புஹாரி மஜ்லிஸின் இறுதி நாள் நிகழ்வு பெப்ரவரி 7 ம் திகதி புதன்கிழமை நிறைவு பெறவுள்ளது. அரம்ப நிகழ்வில், செயலாளர் ஏ.ஏ.புழைல், முன்னாள் தலைவர்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், மரைக்காயர்கள் உள்ளிட்ட முக்கியஸ்த்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.





# மாணவர்களின் அடைவு மட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடனான கூட்டம்!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மகா வித்தியாலயத்திலிருந்து இவ்வருடம் க.பொ.த. (சா.தர) மாணவர்களின் அடைவு மட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடனான கூட்டம் நேற்று புதன்கிழமை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையிலான கல்வி அதிகாரிகள் குழுவினரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

விசேட பாடசாலைத் தரிசிப்பில் ஈடுபட்டு பலதரப்பட்ட விடயங்களை அவதானித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிய வலயக் கல்வி பணிமனை அதிகாரிகள் பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்திக்காக துரிதமாக இரண்டு மில்லின் ரூபாவினை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்துள்ளனர்.

மேலும் கடந்த 2023 டிசம்பரில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.சஹுதுல் நஜீம் அவர்களின் சிபாரிசின் அடிப்படையில் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் உழவர் திருநாள்

(ஹஸ்பர் ஏ.எச்)

உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையும் திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமும் இணைந்து நடாத்தும் உழவர் திருநாள் விழா 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இலங்கைக் கிளையின் தமிழர் கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் சுந்தரம் சிவபாலன் தலைமையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் நிகழ்வின் ஆண்மீக அதிதிகளாக திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இமானுவல் ஆண்டகை ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நிகழ்வின் முதன்மை அதிதியாக உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் தலைவர் த. மகிபாதேவன், சிறப்பு அதிதியாக திருகோணமலை நகராட்சி மன்றத்தின் செயலாளர் வெ. இராஜசேகர் ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

திருமதி.சிவதர்ஷினியின் மாணவிகளின் வரவேற்பு நடனமும் திருகோணமலை பொது நூலகத்தின் நூலக உதவியாளர் அ.அச்சுதனின் வரவேற்புரையும் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவத்தின் சிறப்புரையும், பாரதி தமிழ் வித்தியாலய மாணவர்களின் உழவர் நடனம் உட்பட பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட 2024 – வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

2024 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட வேலைத் திட்டத்தினை நேர்த்தியான முறையில் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட திணைக்கள தலைவர்கள், சூம் செயலி மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ரிசாட் பதியுதீன், கௌரவ வினோ நோகராதலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சி சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பாக விசேட கலந்துரையாடல்





கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று (24) புதன்கிழமை காலை 11.30 க்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அவர்களின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த கூட்டங்களில் பொலீஸ், இராணுவம், கடற்படை பிரிவுகளுக்கு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரால் வலியுறுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால் தற்போது குறித்த நடவடிக்கைகளில் தளர்வு நிலை காணப்படுகிறது.

இதற்காகவே குறுகிய காலத்தில் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானது, என குறிப்பிட்டார்.

இதன்போது, மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட தூறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

மேலும், கிளிநொச்சி குளத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பாளர், கண்டாவளை பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், பச்சிலைப்பள்ளி உதவி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், துறைசார் திணைக்கள தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், இரணைமடு கமக்காரார் அமைப்பின் செயலாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (02)






## இலவச மருத்துவசேவையின் எதிர்காலம் பற்றிய திட்டம்!

மருத்துவ சேவையின் எதிர்காலத்திற்காக அனைத்து மருத்துவ சங்கங்களும் இணைந்து புதிய திட்டத்தை தொடங்க முடிவு செய்துள்ளன.

அரசவைத்தியஅதிகாரிகள்சங்கம், விசேடவைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை மருத்துவ நிறுவனம் உட்பட அனைத்து துறைகளின் வைத்தியர்களின் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து நேற்று (24) விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க இந்த விடயம் குறித்து கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் இலவச சுகாதார சேவையை எதிர்காலத்தில், நாடு சுமையாக உணராத வகையில் இந்த நாட்டு மக்களுக்கு தரமான சேவைகளை வழங்கக்கூடிய ஓர் அமைப்பு பற்றி பேச வேண்டும்.

மக்களுக்கு அதிக சேவைகளை எவ்வாறு வழங்க முடியும்? மருந்துகளுக்கு செலவழிக்கும் பணத்திற்கு நியாயம் செய்வோம். குறைந்த செலவில் இந்தச் சேவையை வழங்குவோம். அதை எப்படிச் செய்வது என்று விவாதித்தோம்.

இந்த நாட்டில் இலவச சுகாதார சேவையை புதிய அத்தியாயத்திற்கு கொண்டு செல்வதற்கான ஒப்பந்தத்தை எட்டினோம் என தெரிவித்தார்.

## குப்பை மேட்டுக்கு வரும் யானை அருகில் குடியிருப்போர் அச்சம்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பாரதிபுரம் சின்னத் தோட்டம் பகுதியில் கிண்ணியா நகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகளை சின்னத் தோட்ட பகுதியில் கொட்டுவதனால் கழிவுகளை உண்ண வருகின்ற யானை அருகில் குடியிருப்பவர்களின் குடியிருப்புகளுக்கு வந்து தம்மையும் தமது தோட்ட பயிர்களையும் அழித்து விடும் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த யானை பாதுகாப்பு மின்சார வேலி கடந்த சில வருடங்களாக இயங்காததனால் குப்பை மேட்டுக்கு வருகின்ற யானை வீடுகளுக்கு வந்திடும் என அச்சம் தவிக்கின்றனர்.

ஏற்கனவே இந்த யானை வீடுகளையும் விட்டுத் தோட்ட பயிர்களையும் அழித்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இப்பொழுது மின்சார வேலி இல்லாதபடியினால் மீண்டும் தமது குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என தெரிவிக்கின்றனர்.

தென்னை, வாழை, மரவள்ளி முதலான பயிர்களை அளித்து விடும் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால் மின்சார வேடியை அமைத்துத் தருமாறு அம்மக்கள் தெரிவிப்பதோடு தமக்கு பாதுகாப்பு தர


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!